# அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி

## நாமக்கல் – 637 002

# ஆண்டு மலர்
# 2018 - 2019



## இதனுள்

ஆண்டறிக்கை
உதவித்தொகை
நாட்டுநலப்பணித்திட்டம்
நூலகம்
இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்
சூழல் சங்கம்
செஞ்சுருள் சங்கம்
நுண்கலை மன்றம்
தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி மையம்
உள்தர மதிப்பீட்டு மையம்
தமிழ்த்துறை
ஆங்கிலத்துறை
பொருளியல் துறை
வணிகவியல் துறை
வணிக நிர்வாகத்துறை
கணிதத்துறை
புள்ளியியல் துறை
இயற்பியல் துறை
தாவரவியல் துறை
வேதியியல் துறை
விலங்கியல் துறை
புவியியல் துறை
கணினி அறிவியல் துறை
உடற்கல்வித்துறை
மாணக்கர்களின் படைப்புகள்

## மலர் முகம்

ஆண்டு மலரே இவ்வாண்டு மலரே
ஆண்டும் முடிந்தது மலரும் பூத்தது
மீண்டும் எங்கள் சாதனை பூத்தது
யாண்டும் புகழினைப் பரப்பும் மலரிது
வேண்டிய பலனைக் காட்டும் மலரிது
நீண்டு பல்லாண்டு வளரும் மலரிது



முனைவர் இ.ஜி.வெஸ்லி, தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் Indian Academy of Sciences, Bangalore நிறுவனத்திடமிருந்து பயிலரங்கம் நடத்துவதற்கு ரூ. 1,39,514 நிதி நல்கை பெற்றுள்ளார்.

முனைவர் பி. சிவக்குமார் வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் UGC குறுந்திட்ட ஆய்வின் இரண்டாம் தவணைத் தொகையாக 36,000 ரூபாயும் மேலும் அவர் Tamil Nadu State Council for Higher Education மூலம் ஆய்வுத் திட்ட நிதியாக 50,000 ரூபாயும் பெற்றுள்ளார்.

இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் டி. சசிகுமார் நெறியாளுகையின்கீழ் பி. கோமதி மற்றும் பி. சிவக்குமார் ஆகியோர் சமர்ப்பித்த "பயோ பிளாஸ்டிக்" தயாரிப்பு தொடர்பான திட்டக் கட்டுரையானது தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மற்றும் மாநில மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரூ. 7,500 உதவித்தொகை பெறப்பட்டது.

தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கே. பழனிசாமியின் நெறியாளுகையின் கீழ் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர் கே. மாணிக்கம் (முது அறிவியல் தாவரவியல்) மாணவர் குறுந்திட்ட ஆய்வுக்கான ரூ. 15,000 நிதியைப் பெற்றுள்ளார்.

இந்தக் கல்வியாண்டில் பணி நிறைவு பெறும் புவியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் க. பன்னீர்செல்வன், தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் அரசுபரமேசுவரன், இயற்பியல் துறை ஆய்வக உதவியாளர் திரு. கு. நல்லேந்திரன் ஆகியோருக்குப் பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களுக்கு அடையாள அட்டை பெற்றுத்தரப்பட்டது. பல்வேறு நாட்களில் நெகிழிக் குப்பைகளை ஒழித்தல், நாட்டு நலப்பணித்திட்ட விழிப்புணர்வு, டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு, உயர்கல்வி குறித்து வழிகாட்டும் நிகழ்வு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 23.02.2019 அன்று கல்லூரி மாணவர்களுக்கு "உங்களால் முடியும்" என்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தை வழிநடத்தும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் திரு. சி. சின்னுசாமி, முனைவர் சு. பாலமுருகன், முனைவர் பி. சிவக்குமார், முனைவர் வெ. ராஜேஸ்வரி ஆகியோருக்குப் பாராட்டுகள்.

**நூலகம்**

இக்கல்லூரியில் பொது நூலகம், மின்னூடக நூலகம் எனத் தனித்தனியே இரண்டு நூலகங்கள் உள்ளன. 60-க்கும் மேற்பட்ட பருவ இதழ்களும், தினசரி செய்தித்தாள்களும் இவற்றுடன் 50,000-க்கும் மேற்பட்ட புத்தகங்களையும் கொண்டு இயங்குகிறது. மேலும் போட்டித் தேர்வில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கென்று தனியாகப் போட்டித் தேர்வுப் புத்தகப் பிரிவு செயல்பட்டு வருகிறது. நூலகர் திரு. பொன். ராஜ்குமார் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் *(Youth Red Cross)***

இரத்த தான விழிப்புணர்வு, கண் தான விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, மரம் நடும் நிகழ்ச்சி, இரத்த தான முதலுதவிப் பயிற்சி மற்றும் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி ஆகிய பல்வேறு நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. இச்சங்கத்தைப் பேணிக் காத்துவரும் முனைவர் இ.ஜி. வெஸ்லி அவர்களுக்குப் பாராட்டுகள்.

**சூழல் சங்கம் (*ECO CLUB*)**

இச்சங்கத்தின் சார்பாக மக்காத குப்பையை மக்கும் குப்பையாக்குதல், நீரின் முக்கியத்துவம் மற்றும் புவி வெப்பமாதல், நெகிழியினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதற்கான மாற்று பற்றிய பல்வேறு விழிப்புணர்வுச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. இச்சங்கத்தைச் செவ்வனே வழிநடத்தி வரும் விலங்கியல் துறைத்தலைவர் முனைவர் மோ. இராஜசேகரபாண்டியன் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**செஞ்சுருள் சங்கம்**

இச்சங்கத்தின் சார்பாக வாழ்க்கைமுறை மாற்றத்தால் வரும் நோய்கள் மற்றும் அதை ஒழிக்கும் முறைகள், மன அழுத்தம் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிமுறைகள், எச்.ஐ.வி., எய்ட்ஸ் விழிப்புணர்வு, ரத்ததானம், மகளிர் உடல் நலம் பேணுதல் போன்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் பயிலரங்கமும் நடத்தப்பட்டன.

20.07.2018 அன்று செஞ்சுருள் சங்கம் (RRC) சார்பில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை "வாழ்க்கை முறை மாற்றத்தால் வரும் நோய்கள் மற்றும் அவற்றைத் தடுக்கும் முறைகள்" என்ற தலைப்பில் நடைபெற்றது.

விழாவில் தங்கம் மருத்துவமனை மருத்துவர். இரா. குழந்தைவேல் வாழ்க்கைமுறை மாற்றத்தால் வரும் நோய்கள் மற்றும் அவற்றைத் தடுக்கும் முறைகள் குறித்துப் பேசினார். தவறான உணவுப் பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சியின்மை, புகைபிடித்தல், மதுப்பழக்கம் போன்றவற்றிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்பதைப் பல உதாரணங்களுடன் விளக்கினார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர், அரசுபரமேஸ்வரன் மன அழுத்தம் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிமுறைகள் குறித்துப் பேசினார். புத்தக வாசிப்பு, யோகா மற்றும் உயர்ந்த சிந்தனைகளை மனதில் பதிய வைத்துக்கொண்டால் மன அழுத்தத்திலிருந்து விடுபடலாம் என்பதைத் தன் உரையின் மையக் கருத்தாக விளக்கினார்.

23.08.2018 அன்று "வாழ்க்கையைக் கொண்டாடுவோம்" என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் நாமக்கல் மாவட்ட மேற்பார்வையாளர், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு, எம். திருநாவுக்கரசு, அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு எச்.ஐ.வி / எய்ட்ஸ் விழிப்புணர்வு, இரத்த தானம் குறித்த விழிப்புணர்வு மற்றும் வளர் இளம் பருவத்தினருக்கான பாலியல் கல்வி குறித்துப் பேசினார்.

ஆற்றுநர், நம்பிக்கை மையம், நாமக்கல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஜான்சி, நம்பிக்கை மைய சேவைகள் குறித்துப் பேசினார்.

தாவரவியல்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இ.ஜி. வெஸ்லி செஞ்சுருள் சங்கத்தின் நோக்கம், செயல்பாடுகள், தன்னார்வத் தொண்டர்களின் கடமைகள் மற்றும் வாழ்க்கை நெறிமுறைகள் குறித்துப் பேசினார்.

18.09.2018 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியின் செஞ்சுருள் சங்கம் மற்றும் இந்திய மருத்துவ சங்கப் பெண்கள் பிரிவு இணைந்து "வளம் இளம் பருவ மங்கையர் உடல் நலம்" என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை நடத்தின.

நாமக்கல் இந்திய மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் சுப்ரமணியம் தொடக்க உரையாற்றிப் பேசுகையில், இயற்கையோடு ஒன்றிய உணவுமுறையைக் கடைப்பிடிக்கும்போது நோய்நொடியின்றி வாழலாம் என்றார்.

பயிலரங்கில் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி க. வசந்தாமணி தலைமையேற்றுப் பேசுகையில் பெண்கள் உடல் நலத்தைச் சரியான முறையில் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வணிகவியல் துறைத்தலைவர், ஒருங்கிணைப்பாளர், நாட்டு நலப்பணித் திட்டம் / செஞ்சுருள் சங்கம் / இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், சிறப்புரையாற்றிப் பேசுகையில், பெண்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை டாக்டரிடம் தெளிவாக எடுத்துக்கூறி ஆலோசனை பெறவேண்டும் என்றார் முனைவர் இளங்கோவன்.

பயிலரங்கில் நாமக்கல் சந்திரா மருத்துவமனை டாக்டர் சந்திரா பொன்னுசாமி அவர்கள் இரத்த சோகை மற்றும் எச்.ஐ.வி / எய்ட்ஸ் விழிப்புணர்வு என்ற தலைப்பில் பேசினார்.

நாமக்கல் தங்கம் மருத்துவமனை டாக்டர் மல்லிகா குழந்தைவேல் அவர்கள் கேன்சர் விழிப்புணர்வு குறித்து மாணவிகளிடம் பேசினார்.

நாமக்கல் சரவணா மருத்துவமனை டாக்டர் கவிதா சரவணகுமார் அவர்கள் தன் சுத்தம் மற்றும் மாதவிடாய் தொடர்பான சுகாதாரம் குறித்து மாணவிகளிடம் பேசினார்.

இவ்விழாவினைக் கல்லூரி செஞ்சுருள் சங்கத் திட்ட அலுவலர் முனைவர் ம. சந்திரசேகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

14.03.2019 "நலமுடன் வாழ மற்றும் தலைமைப் பண்பு திறன் வளர்த்தல்" என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் சீ. குணசேகரன் தலைமை தாங்கிக் குத்துவிளக்கேற்றிப் பயிற்சிப் பட்டறையைத் தொடங்கி வைத்தார். தாவரவியல் துறைத்தலைவர் திருமதி க. வசந்தாமணி வாழ்த்துரை வழங்கினார்.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர் மருத்துவர் ஜனார்த்தனன் "நலமுடன் வாழ" என்ற தலைப்பில் பேசுகையில் ஆரோக்கிய வாழ்வுக்கான வழிகள், மனித இயல்பினால் மாறும் குணங்கள், மனம் போன வழியில் செல்லாமல் புத்திகாட்டும் வழியில் செல்லுதல், நோய்கள் மற்றும் அவற்றின் தீர்வுகள், நோய்களுக்குத் தக்கபடி வாழ்வியல் முறையை மாற்றிக்கொள்ளுதல் ஆகியன பற்றி விரிவாகக் கூறினார்.

தலைமைப் பண்பு திறன் வளர்த்தல் குறித்துத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அரசுபரமேஸ்வரன் பேசுகையில் கல்லூரியில் பயிலும் காலத்தில் மாணவர்கள் தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் மாணவர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களை வழிநடத்துதல், ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுத்துதல் போன்றவை தலைமைக்குரிய தகுதிகளாகும். இவை இன்றைய தலைமுறைக்கு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

21.03.2019 அன்று உலக காசநோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டுச் செஞ்சுருள் சங்கம் மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம், நாமக்கல் மாவட்ட காசநோய் மையம் இணைந்து "காசநோய் விழிப்புணர்வு" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் (காசநோய்) துணை இயக்குநர் மருத்துவர் கணபதி அவர்கள் "காசநோய் விழிப்புணர்வு" என்ற தலைப்பில் பேசுகையில் காசநோய் பற்றிய விளக்கம், எவ்விதம் காசநோய் பரவுகிறது, அதைத் தடுக்கும் முறைகள், காசநோய்த் தொற்றைக் கண்டுபிடிக்க புதிய கருவிகள் அரசு மாவட்ட காசநோய்ப் பிரிவில் உள்ளது பற்றிய விழிப்புணர்வு மற்றும் காசநோய்த் தொற்று ஏற்பட்டால் அதற்கான மருந்துகள் அனைத்து அரசு

மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிடைக்கும் என்பது பற்றிப் பேசினார்.

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி விலங்கியல் துறைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் ராஜசேகர பாண்டியன், சிறப்புரையாற்றிப் பேசுகையில், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாவது தொற்றாக இந்தக் காசநோய் வருகிறது மேலும் செஞ்சுருள் சங்க மாணவர்கள் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் காசநோயை முழுமையாகத் தடுக்க வேண்டும் என்று பேசினார்.

இவ்விழாவினைக் கல்லூரிச் செஞ்சுருள் சங்கத் திட்ட அலுவலர் முனைவர் ம. சந்திரசேகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

இச்சங்கத்தை வழிநடத்தும் தாவரவியல் உதவிப்பேராசிரியர் முனைவர் ம. சந்திரசேகரன் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**நுண்கலை மன்றம்**

இம்மன்றம் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்திப் பிற கல்லூரிகளில் நடைபெறும் கவிதை, கட்டுரை, ஓவியம், வினாடி வினா, நடனம் போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்கச் செய்து பரிசுகளைப் பெற்றுத் தருகிறது.

தோளூர்பட்டி கொங்குநாடு கல்வியல் கல்லூரி நடத்திய மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் II M.A. ஆங்கில இலக்கியம் பயிலும் மாணவி க. யோகதனம் மூன்றாம் பரிசுடன் ரூ. 3,000 பெற்றார்.

சங்ககிரி விவேகானந்தா மகளிர் கல்லூரி நடத்திய போட்டிகளில் க. யோகதனம் (II M.A. English), ஸ்ரீ ஜனனி (II M.Sc. Maths) ஆகிய இருவரும் வினாடி வினா போட்டியில் முதல் பரிசும் க. யோகதனம் (II M.A. English) பேச்சுப்போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்று வந்தனர்.

06.03.2019 அன்று திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நடனப்போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்றார் மா. இராமன் (II M.A. English) 29.02.2019 அன்று கரூர் M. குமாரசாமி பொறியியல் கல்லூரி நடத்திய பல்வேறு போட்டிகளில் தினேஷ் (I M.A. English) கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றார்.

பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்று வந்த மாணவ, மாணவிகளுக்கும் இதன் ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் அரசுபரமேசுவரன், முனைவர் பி. கந்தசாமி, ஆகியோருக்கும் பாராட்டுகள்.

**தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் *(Entrepreneurial Development Cell)***

தமிழ்நாடு அரசின் மாநில தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் 09.01.2019 அன்று நமது கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் 100 நபர்களுக்கு ஒருநாள் தொழில் விழிப்புணர்வுப் பயிற்சி வழங்கப்பட்டது. இறுதியில் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதன் ஒருங்கிணைப்பாளர் முனைவர் த. மாரிச்சாமி அவர்களுக்குப் பாராட்டுகள்.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி மையம் *(Placement and Training Cell)***

இம்மையம் சார்பாக 11.02.2019 அன்று இறுதியாண்டு மாணவ, மாணவியருக்கு “கல்லூரியிலிருந்து கார்ப்பரேட் நிறுவனத்திற்கான பாலம்” என்ற தலைப்பில் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. கோயம்புத்தூர் கே.வி. மேலாண்மைக் கல்லூரிப் பேராசிரியர்கள் முனைவர் முகமதுஅலி மற்றும் பேரா. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு

விழிப்புணர்வு வழங்கினர். நிகழ்ச்சியினை நமது கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் முனைவர் த. மாரிச்சாமி ஒருங்கிணைத்தார்.

**உள் தர மதிப்பீட்டு மையம் *(Internal Quality Assurance Cell - [QAV])***

நமது கல்லூரியின் உள் தர மதிப்பீட்டு மையம் அனைத்துத் துறைகளிலும் நடைபெறும் சாதனைகளைப் பதிவு செய்து வைக்கிறது. இதன் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம. மாதவன் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**தமிழ்த்துறை**

இந்தக் கல்வியாண்டில் தமிழ் மன்றத் தொடக்க விழா 06.07.2018 அன்று நடைபெற்றது. இதில் தமிழக அரசின் விருது பெற்ற எழுத்தாளர் திரு. சுப்ரபாரதிமணியன் "கதைகதையாம் காரணமாம்" என்ற தலைப்பில் உரையாற்றினார். மகாத்மா காந்தியின் 150-ஆவது பிறந்த நாள் விழா, மேதகு அப்துல்கலாம் பிறந்த நாள் விழா, நாமக்கல் கவிஞர் பிறந்தநாள் விழாக்களை இணைத்து முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராகக் காந்தியச் செம்மல் குமரி ஆனந்தன் "காந்தியக் கனவுகள்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இவ்விழாவில் தமிழக அரசின் இளம் தமிழாய்வாளர் விருது பெற்ற முனைவர் துரை ரவிக்குமாருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. முனைவர் பி. பூபதி இலங்கையில் நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் கலந்துகொண்டு கட்டுரை வாசித்தார்.

உதவிப்பேராசிரியர் முனைவர் அரசுபரமேசுவரன் அவர்கள் பெரியார் பல்கலைக்கழக பதிப்புத் துறையில் ஆலோசகராகவும், விவேகானந்தா கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார். மேலும் ஈரோடு கலைக்கல்லூரியில் பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

இத்துறையை வழிநடத்தும் துறைத்தலைவர் முனைவர் மு. நடராஜன் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**ஆங்கிலத்துறை**

இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் ஆகிய பட்ட வகுப்புகளுடன் செயல்பட்டு வரும் இத்துறை மொழிப்பயிற்சி ஆய்வகம் (Language Lab) அதற்கான பயிற்சி வகுப்புகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாணவர்கள் விளையாட்டு, கவிதை, பேச்சுப் போட்டிகளில் பல்வேறு கல்லூரிகளில் சென்று பரிசுகளைப் பெற்று வந்துள்ளனர். இத்துறைத்தலைவர் திரு. கொ. சண்முகம் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**பொருளியல் துறை**

பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சியில் பொருளியல் துறை உதவிப் பேராசிரியர்கள் சு. பாலமுருகன், முனைவர் அ. சக்திவேல், முனைவர். த. மாரிச்சாமி, இரா. பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் நடைபெற்ற பயிற்சியில் இத்துறை உதவிப் பேராசிரியர்கள் முனைவர் இ.பி. விஜயகுமார் மற்றும் முனைவர் எம். செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருவாரூர் திரு. வி.க. அரசு கலைக் கல்லூரி, உதவிப் பேராசிரியர், முனைவர் பா. பாபுராஜ், "ஆராய்ச்சி வழிமுறைகள்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

மேலும் இத்துறைப் பேராசிரியர்கள் முனைவர் மாரிச்சாமி, முனைவர் அ. சக்திவேல் ஆகியோர் பல்வேறு கல்லூரிகளிலும் நிறுவனங்களிலும் சிறப்பு விருந்தினர்களாகச் சென்று சிறப்புச்

சொற்பொழிவாற்றியுள்ளனர்.

இத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மாதவன் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் வரும், கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்திற்கான தேசிய நிறுவனம் நடத்தும் அகில இந்திய மாணவர் திருப்தி குறித்த கள ஆய்வின் ஆலோசகராகவும் தமிழக ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து ஆய்வை வடிவமைக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறார்.

சர்வதேச அளவில் இத்துறைத்தலைவர் முனைவர் ம. குமாரவேலு மற்றும் உதவிப்பேராசிரியர்கள் முனைவர் ம. மாதவன், வே. சாந்தி, மாணவர்கள் பல்வேறு கட்டுரைகளை இதழ்களிலும் கருத்தரங்குகளிலும் வெளியிட்டு வாசித்துள்ளனர். இத்துறையை வழிநடத்தும் துறைத்தலைவர் முனைவர் ம. குமாரவேலு அவர்களுக்குப் பாராட்டுகள்.

**வணிகவியல் துறை**

31.01.2019 அன்று பாவை பொறியியல் கல்லூரியுடன் இணைந்து நம் கல்லூரியின் வணிக நிர்வாகத் துறை மற்றும் வணிகவியல் துறைகள் “Personality Development and Team Building” என்னும் தலைப்பிலான கருத்தரங்கை நடத்தின. இக்கல்வியாண்டில் பல்கலைக்கழகத் தேர்வுப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வரும் துறையின் தலைவர் முனைவர் க. ராஜ்குமார் உள்ளிட்டோருக்குப் பாராட்டுகள்.

**வணிக நிர்வாகத்துறை**

நாமக்கல் செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் மகளிர் கல்லூரி, திருச்செங்கோடு விவேகானந்தா கலை அறிவியல் கல்லூரி, இராசிபுரம் முத்தாயம்மாள் பொறியியல் கல்லூரி மேலாண்மைத்துறை ஆகிய நிறுவனங்கள் நடத்திய பல்வேறு தலைப்பிலான கருத்தரங்குகளில் இத்துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இத்துறையில் பல்வேறு நாட்களில் நடந்த நிகழ்வுகளில் நாமக்கல் செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ந. இராஜவேல் மன அழுத்த மேலாண்மை மற்றும் மன அழுத்தத்தை எதிர்கொள்வது எப்படி என்ற உரையையும் அக்கல்லூரி வேதியியல் துறைத்தலைவர் முனைவர் ம. முத்துக்குமார் அவர்கள் சோப்பு, பினாயில், பாத்திரம் கழுவும் தூள் தயாரித்தல் பயிற்சியும் அளித்தனர்.

நாமக்கல் பாவை பொறியியற் கல்லூரி மேலாண்மைத் துறையைச் சார்ந்த பேராசிரியைகள் திருமதி அ. சத்யப்பிரியா மற்றும் திருமதி கோமதி ஆகியோர் மென்திறன் மேம்பாடு குறித்து விளக்கினார்கள்.

அணியாபுரம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நெகிழி ஒழிப்பு மற்றும் சுகாதாரத்தைப் பேணிக்காத்தல் தொடர்பான விழிப்புணர்வு நாடகங்கள் நடத்தியதோடு பல்வேறு போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இத்துறையைச் செவ்வனே வழிநடத்தும் முனைவர் தெ. காஞ்சனா அவர்களுக்குப் பாராட்டுகள்.

**கணிதத்துறை**

இத்துறைத்தலைவர் முனைவர் வெ. கணேசன் அவர்கள் கரூர் அன்னை மகளிர் கல்லூரி, நாமக்கல் டிரினிட்டி மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளின் கருத்தரங்குகளில் சிறப்பு விருந்தினராகவும் நடுவராகவும் கலந்து கொண்டதோடு கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். மேலும் பல்வேறு போட்டிகளில் மாணாக்கர்களைப் பங்கேற்கச் செய்து ஊக்கப்படுத்தி வருகிறார். அவருக்குப் பாராட்டுகள்.

**புள்ளியியல் துறை**

புள்ளியியல் துறையின் தலைவர் திருமதி சா. சுஜாதா பிப்ரவரி 2019 இல் 21 நாள் புத்தொளிப் பயிற்சியில் கலந்து கொண்டார். அவருக்கு வாழ்த்துகள்.

**இயற்பியல் துறை**

இத்துறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக இயற்பியல் துறைப் பேராசிரியர் முனைவர் எல். பழனியப்பன், தமிழ்நாடு வேலைவாய்ப்பு விழிப்புணர்வு மையத்தைச் சார்ந்த பயிற்சியாளர் திரு. வி.கே. சாமி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

இத்துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் முனைவர் என். சேதுபதி, முனைவர் டி. சசிகுமார், முனைவர் வி. வேலுசாமி, முனைவர் ஆர். கோபி ஆகியோர் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

இத்துறை ஆய்வு மாணவிகள் த. நந்தினி, ப. அகல்யா, பி. சௌமியா, எஸ். பரணி, வி. சண்முகம், டி. ரூபன்குரு, எம். கார்த்திக், கே. ஜெகநாதன் ஆகியோர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருப்பூர் எல்.ஆர்.ஜி. கலைக் கல்லூரி, திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கல்லூரி முதலானவை நடத்திய கருத்தரங்குகளில் தங்கள் கட்டுரைகளை வாசித்துள்ளனர்.

இலங்கை ஜாப்னா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மூன்று நாள் கருத்தரங்கில் முனைவர் பட்ட மாணவி வி. கவிதா கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார்.

துறைத்தலைவர் முனைவர் சு. பங்காரு மற்றும் ஆய்வு மாணவர்கள் டி. ரூபன்பாபு, வி. சண்முகம் இணைந்து எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் பன்னாட்டு இதழ்களில் வெளிவந்துள்ளன.

பேராசிரியர்களுடன் மாணவர்களும் இணைந்து பன்னாட்டு இதழ்களில் தங்கள் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

இத்துறையை திறம்பட நடத்திவரும் முனைவர் சு. பங்காரு அவர்களுக்குப் பாராட்டுகள்.

**தாவரவியல் துறை**

இக்கல்வியாண்டியல் இந்திய அறிவியல் கழகத்தின் நிதியுதவியுடன் Digital Field Book for Biologists என்னும் தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. இத்துறையைச் சேர்ந்த முதுநிலை மாணவன் தனசேகரன் பல்கலைக்கழகத் தரவரிசையில் இரண்டாமிடமும் மாணவி மோனிசா மூன்றாமிடமும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இத்துறைப் பேராசிரியர்கள் சர்வதேச மற்றும் தேசியக் கருத்தரங்குகளில் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

இத்துறையின் முனைவர் பட்ட மாணவர்கள் பல்வேறு தேசியக் கருத்தரங்குகளில் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

இத்துறைப் பேராசிரியர் திரு. பி. சுப்ரமணியம், கால்நடை மருத்துவர்களுடன் இணைந்து மூலிகை மருத்துவமும் கால்நடை நோய்களும் என்னும் தலைப்பிலான பயிற்சிப் பட்டறையை நடத்தியுள்ளார்.

இத்துறைப் பேராசிரியர் வெஸ்லி, இயற்கை வேளாண்மை அமைப்பின் Best Faculty Award பெற்றுள்ளார். இத்துறை மாணவர்கள் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பிற்கான பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இத்துறையின் தலைவர் திருமதி க. வசந்தாமணிக்குப் பாராட்டுகள்.

**வேதியியல் துறை**

இத்துறையின் தலைவர் முனைவர் ஆர்.வி. சக்திவேல் சென்னைப் பல்கலைக்கழத்திலும், உதவிப் பேராசிரியர்கள் திரு. ஆ. லோகநாதன், முனைவர் பொ. மகாலிங்கம், முனைவர் பி. சிவக்குமார் ஆகியோர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் முனைவர் பொ. தமிழரசு அண்ணாமலை, மதுரை காமராசர் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகங்களிலும் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு தங்களது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர். இத்துறையின் தலைவர் முனைவர் ஆர்.வி. சக்திவேல் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**விலங்கியல் துறை**

இக்கல்வியாண்டு முதல் இத்துறையில் முது அறிவியல் வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது.

துறைத்தலைவர் முனைவர் மோ. இராஜசேகரபாண்டியன் அவர்கள் சாத்தூர் SRNM கல்லூரியில் பாடத்திட்ட வல்லுநர் குழுவில் இடம் பெற்றுள்ளார்.

பேராசிரியர்கள் முனைவர் ப. சேகர், முனைவர் ந. நாகரத்தினம், முனைவர் ம. செல்லப்பன், முனைவர் அ. கிருஷ்ணமூர்த்தி, முனைவர் மு. பிரதாப் ஆகியோர் பல்வேறு பல்கலைக்கழகங்கள் நடத்திய புத்தாக்கப்பயிற்சியில் கலந்துகொண்டனர்.

இத்துறை இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் பல்வேறு நாட்களில் பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்து கொண்டதோடு பயிலரங்கிலும் கலந்துகொண்டு பயிற்சி மேற்கொண்டு வந்துள்ளனர்.

முனைவர் மோ. இராஜசேகரபாண்டியன், முனைவர் எம். செல்லப்பன், முனைவர் எம். தீபா ஆகியோர் பல்வேறு UGC அங்கீகாரம் பெற்ற இதழ்களில் தங்கள் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

முனைவர் எம். பிரதாப் அவர்கள் சிறந்த கட்டுரைக்கான விருது பன்னாட்டுக் கருத்தரங்கில் பெற்றுள்ளார். மேலும் இவர் மலேசியாவில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்று தன்னுடைய கட்டுரையைச் சமர்ப்பித்துள்ளார்.

இத்துறையை வழிநடத்திச் செல்லும் துறைத்தலைவர் முனைவர் மோ. ராஜசேகரபாண்டியன் அவர்களுக்குப் பாராட்டுகள்.

**புவியியல் துறை**

இத்துறை இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட வகுப்புகளுடன் செயல்பட்டு வருகிறது. இத்துறை மாணவர்கள் நாமக்கல் மட்டுமல்லாது பிற மாவட்டங்களிலும் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி வாகை சூடி வந்துள்ளனர் அவர்களுக்கும் இத்துறையைப் பொறுப்புடன் வழிநடத்தும் துறைத்தலைவர் திரு. பெ. சுந்தரசோழன் அவர்களுக்கும் பாராட்டுகள்.

**கணினி அறிவியல் துறை**

நாமக்கல் பாவை பொறியியற் கல்லூரியில் நடைபெற்ற பயிலரங்கில் இத்துறை மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி மேற்கொண்டு வந்துள்ளனர். முனைவர் அ. செந்தில்குமார் மற்றும் முனைவர் எ.து. வெங்கடேஷ் ஆகிய இரண்டு கணினி அறிவியல் துறை உதவிப்பேராசிரியர்கள் இந்தக் கல்வி ஆண்டில் தங்களது புத்தாக்கப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இத்துறையைச் சிறப்புடன் வழிநடத்தும் துறைத்தலைவர் முனைவர் ப. கமலகண்ணன் அவர்களுக்குப் பாராட்டுகள்.

நன்றி.

# உடற்கல்வித்துறை ஆண்டறிக்கை

**பெரியார் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்**

1. பெரியார் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் ஆடவர் போட்டி பரமத்தி வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரியில் செப்டம்பர் மாதம் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் நான்கு சுற்றுகள் வென்று கால் இறுதிப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

2. பெரியார் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான கோ-கோ ஆடவர் போட்டி கொமாரபாளையம் S.S.M. கல்லூரியில் செப்டம்பர் மாதம் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் சிறப்பாக விளையாடினார்கள்.

3. ஓசூர், MGR கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அக்டோபர் மாதம் நடைபெற்ற பெரியார் பல்கலைக்கழக தடகளப் போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக விளையாடினார்கள். மேலும் இப்போட்டியில் விஜயானந்தன், முதுகலை முதலாமாண்டு தமிழ்த்துறை மாணவர் ஈட்டி எறிதல் போட்டியில் ஐந்தாம் இடம் பெற்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

4. பெரியார் பல்கலைக்கழக பளுதூக்கும் போட்டியில் 56 கிலோ எடைப் பிரிவில் நமது கல்லூரி, இளம்அறிவியல் மூன்றாமாண்டு, இயற்பியல் துறை மாணவர் U. செல்வகுமார் நான்காம் இடம் பெற்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

**தென்மண்டல பல்கலைக்கழகப் போட்டிகள்**

5. தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கு இடையே கர்நாடக மாநிலம், சிமோகா - VIT பல்கலைகழகத்தில் ஆடவர் கிரிக்கெட் போட்டி ஜனவரி மாதம் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர் மு. மோகன்குமார், முது அறிவியல் முதலாமாண்டு வேதியியல் துறையைச் சேர்ந்தவர் பெரியார் பல்கலைக்கழகம் சார்பாகக் கலந்துகொண்டு சிறப்பாக விளையாடி நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும் இம்மாணவருக்குப் பல்கலைக்கழக விளையாட்டுத் தரச் சான்றிதழ் எண் மூன்று வழங்கப்பட்டது.

**மாநில அளவிலான தடகளப் போட்டிகள்**

6. தமிழ்நாடு இளையோர் தடகளப் போட்டி சென்னை நேரு விளையாட்டரங்கில் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக விளையாடினார்கள்.

**மாவட்ட அளவிலான போட்டிகள்**

7. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், நாமக்கல் மாவட்டப் பிரிவு சார்பாக பாவை கல்லூரியில் நடைபெற்ற கையுந்துபந்துப் போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக விளையாடினார்கள்.

**ஆண்டு விளையாட்டுப் போட்டிகள்**

8. அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் 51வது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் மாணவ / மாணவிகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியுடன் சிறப்பாகத் துவங்கியது. இந்த அணிவகுப்பு நிகழ்ச்சியில் நமது கல்லூரியில் உள்ள பதின்மூன்று துறை மாணவ / மாணவிகளும் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதை செலுத்தினார்கள். மேலும் இப்போட்டியில் மாணவர்களுக்கு கிரிக்கெட், கால்பந்து, கையுந்துப்பந்து, இறகுப்பந்து, கூடைப்பந்து, கோ-கோ, கபாடி,

சதுரங்கம் மற்றும் தடகளப் போட்டிகளும் சிறப்பாக நடைபெற்றன.

ஆசிரியர் ஆடவர் அணிக்கு கிரிக்கெட் போட்டியும், ஆசிரியர்கள் மகளிர் அணிக்குக் கயிறு இழுத்தல் போட்டியும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் ஆடவர் மற்றும் மகளிர் அணிக்குக் கயிறு இழுத்தல் போட்டியும் சிறப்பாக நடைபெற்றது.




2018–19 விளையாட்டு விழா மற்றும் ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினர் நாமக்கல் மாவட்டக் காவல் துணை கண்காணிப்பாளர் திரு. அர. அருளரசு, இ.கா.ப, சிறப்புரையாற்றுதல்





2018–19 விளையாட்டு விழா மற்றும் ஆண்டு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சீ. குணசேகரன் ஆண்டறிக்கை வாசித்தல்




2018–19–ல் நடைபெற்ற விளையாட்டு விழாவில் தனிநபர் சேம்பியன்ஷிப் பரிசினை மாணவி E. கவிதா I M.A., (Eng) மோகனூர் காவல் ஆய்வாளர் திரு. சுகுமார் அவர்களிடம் பெறுதல்



மாவட்ட விளையாட்டு அதிகாரி
திரு. சீ.தா. பெரியகருப்பன்
அவர்கள் மாணவனுக்குப்
பரிசு வழங்குதல்.



2018–19 ஆண்டு விழா மற்றும்
விளையாட்டு விழாவில்
மாணவிகள் 800 மீட்டர்
ஓட்டப் பந்தயம்



ஒட்டுமொத்த சேம்பியன்ஷிப்
பரிசினை
திரு. அர. அருளரசு, இ.கா.ப,
அவர்கள் வேதியியல் துறை
மாணவர்களுக்கு வழங்குதல்



இக்கல்லூரியில் பயிலும்
மாணவர்
K. மோகன்குமார் I. M.Sc (Che)
தென் மண்டல பல்கலைக்
கழகங்களுக்கிடையேயான
கிரிக்கெட் போட்டியில் பெரியார்
பல்கலை சார்பாகக் கலந்து
கொண்டு தேர்வாகி மாவட்டக்
கண்காணிப்பாளிரிடம்
பரிசுபெறுதல்



விளையாட்டு விழா தொடக்கமாக
அணிவகுப்பு மரியாதை மற்றும்
ஒலிம்பிக் சுடர் எற்றல்.
அருகில் உடற்கல்வி இயக்குநர்
முனைவர். அ. கார்த்திக் மற்றும்
மாணவ மாணவிகள்.




“வளர் இளம் பருவ மங்கையர்
உடல் நலம்” என்ற தலைப்பில்
நடைபெற்ற ஒரு நாள்
பயிலரங்கில் பெரியார்
பல்கலைக்கழக வணிகவியல்
துறைத்தலைவர்
முனைவர் இளங்கோவன்
ஆற்றிய உரை

## கல்வி

படிப்பு எனும் படியை ஏறு
சொர்க்கம் எனும் சோலை கிடைக்கும்!
புத்தகம் எனும் செடியை
அறிவெனும் வேரால் தாங்கு!
பூக்கள் எனும் புனிதமான வாழ்க்கை
கிடைக்கும்
கல்வி எனும் கருவிழியை
இமைகளாய் மாறிப் பாதுகாத்துக்கொள்
உலகமே அந்தக் கருவிழி வழியில் தெரியும்!
வாழ்க்கை இருக்கிறது உனக்காக
வாழ்ந்து பார்
கல்வியின் துணையோடு……

மா. அட்சயா
முதலாமாண்டு முதுகலை தாவரவியல்

## விநாயகர்



ஆர். பிரியங்கா
மூன்றாமாண்டு
இளம் அறிவியல் (தாவரவியல்)

## Wonderful Numbers

15873 x 7 = 111111
15873 x 14 = 222222
15873 x 21 = 333333
15873 x 28 = 444444
15873 x 35 = 555555
15873 x 42 = 666666
15873 x 49 = 777777
15873 x 56 = 888888
15873 x 63 = 999999

வ. கோமதி
இரண்டாமாண்டு முதுஅறிவியல் கணிதம்

## வாழ்க்கைக் கல்வி

| | | |
|---|---|---|
| நல்லவற்றை | "+" | கொள் |
| தீயவற்றை | "-" | கொள் |
| அறிவை | "x" | கொள் |
| நேரத்தை | " " | கொள் |
| இன்பதுன்பங்களை | "=" | கருது |

எம். இந்துமதி
இரண்டாமாண்டு முதுஅறிவியல் கணிதம்

## வாழ்க்கை நியதி

யானைகள் வாழும் பூமியில்தான்
எறும்புகளும் வாழ்கின்றன.....

பூனைகள் வாழும் வீடுகளில்தான்
எலிகளும் வாழ்கின்றன.....

சிறுத்தைகள் வாழும் காடுகளில்தான்
மான்களும் வாழ்கின்றன.....

சுறாக்கள் வாழும் கடலில்தான்
சிறு மீன்களும் வாழ்கின்றன....

பாம்புகள் வாழும் வயல்களில்தான்
தவளைகளும் வாழ்கின்றன.....

வாழ்க்கை என்பது
ஏய்த்துப் பிழைப்பதல்ல!!
போராடி ஜெயிப்பது!!

ஆர். சரண்யா
இரண்டாமாண்டு முதுஅறிவியல் கணிதம்

## வரம்

பெண்ணாகப் பிறந்ததையே
வரமாக நினைத்தாள் - தன்
குழந்தைக்குத்
தாயாகும் போது......

வ. கோமதி
இரண்டாமாண்டு முதுஅறிவியல் கணிதம்

## Abdul Kalam Quotes

***Self Motivation***

I am the best
I can do it
God is always with me
I am a winner
Today is my day

***Get a message to get success***

Don't read success stories
You will only get a message
Read failure stories
You will get some ideas
to get success

***Future and Habits***

You cannot change
your future. But you
can change your
Habits
and surely your habits
will change your
future.

மா. அட்சயா
முதலாமாண்டு முதுகலை தாவரவியல்




## சரஸ்வதி



எஸ். குமாரி
மூன்றாமாண்டு
இளம் அறிவியல் (தாவரவியல்)

## கலைக்கோவில்

அறிவும் நீயே....
ஆற்றலும் நீயே !..... உன் செல்வங்களுக்கு
இன்றியமையாத கல்வியை
ஈன்ற தாயும் நீயே
உன்னத படைப்பாளிகளை
ஊற்றெடுத்து உருவாக்கிய
என் கலைக்கோயிலே! .....
ஏற்றமிகு கல்வியை
ஐம்பது ஆண்டுகளாய் போதித்தாயே!..... இன்னும்
ஒரு யுகம் தாண்டி வாழட்டும் உன் பெயர்!...
ஓங்கி உயரட்டும் உன் புகழ்! செம்மொழியாம்
ஔவைத் தமிழ்மொழியில் மாபெரும்
மகுடம் சூட்டிப் பல்லாண்டு
நீ வாழ்க! வாழ்க! வாழ்கவே!...

ம. லோகேஸ்வரி
முதலாமாண்டு முதுஅறிவியல் தாவரவியல்

## வெற்றி வாழ்க்கை வாழ...

அ - அதிகாலை எழு
ஆ - ஆகாயம் தொழு
இ - இருதயம் துடிக்கவிடு
ஈ - ஈறுழுந்தப் பல்தேய்
உ - உடல்வேர்வை கழி
ஊ - ஊளைச்சதை ஒழி
எ - எருதுபோல் உழை
ஏ - ஏழைபோல் உண்
ஐ - ஐம்புலன் பதுக்கு
ஒ - ஒழித்துவிடு புகை மதுவை
ஓ - ஓட்டம்போல் நட
ஔ - ஔடதம் பசி

வ. கோமதி
இரண்டாமாண்டு முதுஅறிவியல் கணிதம்




முத்தமிழ் மன்ற விழாவில்
குமரி ஆனந்தன்

நாட்டு நலப்பணித்திட்டம்
கொடிநாள் நிதி வசூலித்து
முன்னாள் இராணுவ
வீரர்களுக்கு அளிக்கப்பட்டது.





நாட்டு நலப்பணித்திட்டம்
நேரு யுவகேந்திரா சார்பில்
தூய்மை இந்தியா விழிப்புணர்வு
கருத்தரங்கு நடைபெற்றது.



நாட்டு நலப்பணித்திட்டம்
சுதந்திர தின விழாக்
கொண்டாட்டம்



மாவட்ட அளவில் நடைபெற்ற
பளு தூக்கும் விளையாட்டுப்
போட்டியில் முதல் பரிசு பெற்ற
III B.Sc., ப. செல்வகுமார்
கணிதத்துறை மாணவர்
முதல்வரிடம் ஆசி பெறுதல்



தமிழ் மன்றத் தொடக்க
விழாவில் எழுத்தாளர்
திரு. சுப்ரபாரதிமணியன்
ஆற்றிய உரை

# இவ்வாண்டு பணி நிறைவு பெற்றவர்கள்



முனைவர் **சீ. குணசேகரன்** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
முதல்வர்
பணியில் சேர்ந்த நாள் : 05.12.1994
பணி நிறைவு பெற்ற நாள் : 31.05.2019



முனைவர் **அரசுபரமேசுவரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்
பணியில் சேர்ந்த நாள் : 28.02.2011
பணி நிறைவு பெற்ற நாள் : 31.05.2019



முனைவர் **க. பன்னீர்செல்வம்**
புவியியல் இணைப் பேராசிரியர்
பணியில் சேர்ந்த நாள் : 26.08.1996
பணி நிறைவு பெற்ற நாள் : 31.05.2019



திரு. **கு. நல்லேந்திரன்**
ஆய்வக உதவியாளர், இயற்பியல் துறை
பணியில் சேர்ந்த நாள் : 22.03.1989
பணி நிறைவு பெற்ற நாள் : 31.05.2019

# அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி

நாமக்கல் - 637 002